Let the mind manage the body
Que l'esprit gère le corps

Index Number: ..........................................................................

# NATIONAL CERTIFICATE OF EDUCATION

2023

## TAMIL (N620)

**TIME: 2 HOURS 15 MINUTES**

Candidates answer on the Question Paper.

---

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your index number in the space provided above.
2. Write in dark blue or black ink.
3. Any rough working should be done in this booklet.
4. Answer **ALL** questions.
5. This document consists of **10** questions printed on **13** pages, numbered **2** to **14**.
6. The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
7. The total of marks for this paper is **100**.

| For Examiners' use | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Question No.** | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **Total** | **Signature** |
| **Examiner** | | | | | | | | | | | | |
| **Team Leader** | | | | | | | | | | | | |
| **CE/ACE** | | | | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate

Marks

**Question 1 (15 marks)**

**சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. உழவர் வயலில் கரும்பு வெட்டினார். ………………… களைப்பாய் இருந்தார். [1]

அ. அது ஆ. அவள்

இ. அவர் ஈ. நான்

உ. வள்ளியும் கந்தனும் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி ……………… . [1]

அ. பெற்றாள் ஆ. பெற்றார்கள்

இ. பெற்றான் ஈ. பெற்றார்

ங. அம்மா கறியில் ………………… உப்பு போடச் சொன்னார்? [1]

அ. எவ்வளவு ஆ. எத்தனை

இ. எது ஈ. என்ன

ச. வீட்டில் நுழைந்த ………………… இன்னும் காணவில்லை. [1]

அ. திருடனுக்கு ஆ. திருடன்

இ. திருடனின் ஈ. திருடனை

ரு. பெரியம்மா ………………… புடவையை மடித்து வைத்தார். [1]

அ. துவைத்த ஆ. துவைத்துப்

இ. துவைத்தேன் ஈ. துவைத்தார்

சூ. இப்பொழுது நானும் என் நண்பனும் ஆங்கிலப் படத்தைப் ………………… . [1]

அ. பார்த்தோம் ஆ. பார்க்கிறோம்

இ. பார்ப்போம் ஈ. பார்க்கிறேன்

எ. கண்காட்சியில் பல ஓவியங்கள் இருந்தன. அவை ………………… . [1]

அ. அழகானவை ஆ. அழகானது

இ. அழகான ஈ. அழகாய்

Marks

அ. சங்கத்தலைவர் கூட்டத்தில் .................... உரையை ஆற்றினார். [1]

அ. நின்றார் ஆ. நின்று

இ. நிற்க ஈ. நில்

கூ. என் அத்தை எனக்கும் .................... கணினியை வாங்கினார். [1]

அ. தம்பியையும் ஆ. தம்பியிடமும்

இ. தம்பியோடும் ஈ. தம்பிக்கும்

க0. தெரு ஓரத்தில் காவற்காரர் இருக்கிறார். .................... மாணவர்கள் தெருவைச் சீக்கிரமாகக் கடக்கிறார்கள். [1]

அ. ஆனால் ஆ. அல்லது

இ. அதனால் ஈ. ஆனாலும்

கக. கோடிட்ட சொற்களை **ஒருமையில்** எழுது. [1]

சுவரில் பல்லிகள் இருக்கின்றன.

.................................................................................... .

கஉ. ‘போது’ என்னும் சொல்லைக் கொண்டு கீழ்க்காணும் இரண்டு தொடர்களை **இணைத்து** எழுது. [1]

புலவர் விழாவுக்கு வந்தார். ஆசிரியர் அவரை வரவேற்றார். (போது)

.................................................................................... .

கங. ‘உடனே’ என்னும் சொல்லைக் கொண்டு கீழ்க்காணும் இரண்டு தொடர்களை **இணைத்து** எழுது. [1]

அக்கா திருமணத்தை அடைந்தார். உதவி செய்தார். (உடனே)

.................................................................................... .

கச. கீழ்க்காணும் தொடர்களை **வினையெச்சத் தொடராக** மாற்றி எழுது. [1]

தாத்தா வண்டியை ஓட்டினார். அவர் கடைக்குப் போனார்.

.................................................................................... .

கரு. கீழ்க்காணும் தொடரை **உடன்பாட்டு வினைத்தொடராக** மாற்றி எழுது. [1]

நேற்று அவர்கள் தோட்ட வேலையைச் செய்யவில்லை.

.................................................................................... .

| |
|---|
| E |
| TL |
| CE |

Marks

## Question 2 (5 marks)

**சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. மழை பெய்தது. மீனாவால் வெளியே போக முடியவில்லை. அவள் தன் ……….. மறந்துவிட்டாள். [1]

அ. நூலை ஆ. குவளையை

இ. பேனாவை ஈ. குடையை

உ. கொய்யாப்பழம் கெட்டுப் போய்விட்டது. நீ அதை ………… வேண்டும். [1]

அ. சாப்பிட ஆ. சமைக்க

இ. எறிய ஈ. குடிக்க

ங. நாங்கள் ………… பணத்தை எடுக்கிறோம். [1]

அ. பள்ளியிலிருந்து ஆ. வங்கியிலிருந்து

இ. கடையிலிருந்து ஈ. மருத்துவமனையிலிருந்து

ச. மணி என்ன என்று சொல்ல முடியுமா? என் ………… உடைந்துவிட்டது. [1]

அ. கைக்கடிகாரம் ஆ. பணப்பை

இ. பை ஈ. நாற்காலி

ரு. என் தாத்தா வியாதியாய் இருக்கிறார். மருத்துவரைச்………… கூப்பிடு. [1]

அ. திடீரென்று ஆ. சீக்கிரமாகக்

இ. அரிதாகக் ஈ. ஒருபோதும்

E

TL

CE

Marks

## Question 3A (5 marks)

**கீழ்க்காணும் பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுது.**

**என் உயிர் நண்பன்**

அவனுடைய பெயர் ஆரன். அவனுக்கு வயது பதினான்கு. அவன் எனக்குப் பிடிக்கும். ஏனென்றால், அவன் நேர்மையானவன். அவனுக்குச் சமையல் செய்யப் பிடிக்கும். நான் அவனைப் போய்ப் பார்க்கிறபோது அவன் சுவையான பலகாரங்களைச் சுடுகிறான். முதல் தரத்திலிருந்து எனக்கு ஆரன் தெரியும். நாம் இருவரும் ஒரே தரத்தில் இருந்தோம். எங்களுக்குக் கால்பந்து விளையாடப் பிடிக்கும்.

அ. உன் உயிர் நண்பனின் பெயர் என்ன? [1]

……………………………………………………………………………..

ஆ. அவன் உனக்கு ஏன் பிடிக்கும்? [1]

………………………………………………………………………………

இ. அவனுக்கு என்ன செய்யப் பிடிக்கும்? [1]

………………………………………………………………………………

ஈ. எந்தத் தரத்திலிருந்து உனக்கு ஆரன் தெரியும்? [1]

………………………………………………………………………………

உ. உங்களுக்கு என்ன செய்யப் பிடிக்கும்? [1]

………………………………………………………………………………

| E |
|---|
| TL |
| CE |

Marks

## Question 3B (5 marks)

**கீழ்க்காணும் பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுது.**



| | |
|---|---|
| **குமரி** | வணக்கம் வரதன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை குமுதாவுடைய பிறந்தநாள். அவள் என்னை அழைத்தாள். அவளுக்குப் பதினைந்து வயது ஆகும். நாளைக்கு நான் நகரத்துக்குப் போவேன். அவளுக்கு ஓர் அழகான பரிசு வாங்கப் போவேன். நீ என்னோடு நகரத்துக்கு வருவாயா? நான் பன்னிரண்டு மணிக்குப் பேருந்தை எடுப்பேன். |
| **வரதன்** | வணக்கம் குமரி. ஆம், நான் உன்னோடு நகரத்துக்கு வருவேன். நேரம் இருந்தால், நாம் இருவரும் ஒரு படத்தைப் பார்க்கப் போகலாம். பேருந்து நிறுத்தும் இடத்தில் சந்திப்போம். |

அ. அடுத்த ஞாயிற்றுக்கிழமை குமரி எங்கே போவாள்? [1]

.....................................................................................................

ஆ. குமரி ஏன் நகரத்துக்குப் போவாள்? [1]

.....................................................................................................

இ. குமரி எப்படி நகரத்துக்குப் போவாள்? [1]

.....................................................................................................

ஈ. நேரம் இருந்தால் அவர்கள் என்ன செய்ய நினைக்கிறார்கள்? [1]

.....................................................................................................

உ. குமரியும் வரதனும் எங்கே சந்திப்பார்கள்? [1]

.....................................................................................................

| |
|---|
| E |
| TL |
| CE |



Please turn over

Marks

**Question 4 (5 marks)**

**வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடிட்ட இடத்தில் எழுது.**

என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பூந்தோட்டத்தைக் காணலாம். ……………………… **(அம்மாவை)** அத்தோட்டத்தில் பலவகைப் பூக்களை நட்டார். அன்றைக்கு நான் ……………………… **(தோட்டத்தை)** சில பூக்களைப் பறித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ……………………… **(பல)** தேனீ என் விரலைக் கொட்டியது. என்னால் வலியைத் ……………………… **(தாங்கு)** முடியவில்லை. நான் கத்திக்கொண்டு வீட்டுக்குள் ……………………… **(நுழை)**. உடனே அம்மா என் விரலில் மருந்து போட்டார்.

| |
|---|
| E |
| TL |
| CE |

**Question 5 (5 marks)**

**கோடிட்ட சொற்களைத் திருத்தி எழுது. ஓர் எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது.**

நேற்று வேலன் தெருவில் நடந்து **<u>போ</u>**. வழியில் அவன் ஒரு **<u>விபத்துக்குப்</u>**

……………………………**போனான்**…………………………………………………

பார்த்தான். அதைப் பார்த்ததும் **<u>அவனை</u>** அதிர்ச்சி ஏற்பட்டது. அவன் **<u>அழு</u>**

…………………………………………………………………………………………

தொடங்கினான். நல்ல வேளை அவனுடைய **<u>மாமனை</u>** அங்கே இருந்தார்.

…………………………………………………………………………………………

**<u>அவன்</u>** வேலனுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினார்.

…………………………………………………………………………………………

| |
|---|
| E |
| TL |
| CE |

Marks

## Question 6A (5 marks)

**கீழ்க்காணும் பகுதியைப் படித்துச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுது.**

| | | | |
|---|---|---|---|
| **சூடாக** | **தோழி** | **பள்ளி** | **வெட்கம்** |
| **கட்டிலின்** | **~~ஆசிரியர்~~** | **விளையாடுகிறேன்** | |

நாள்தோறும் அமலன் பள்ளிக்குத் தாமதமாக வருகிறான். அவனுடைய **ஆசிரியர்** கோபமாய் இருக்கிறார். அமலனுக்கு ________________ ஏற்படுகிறது. “நாள்தோறும் நான் ஏன் தாமதமாக வருகிறேன், தெரியுமா?” என்று அவன் தன் ________________, கோமதியிடம் கேட்கிறான். “நான் ஆறு மணிக்கு எழுகிறேன். நான் சிறிது நேரம் ________________ மேல் இருக்கிறேன். பிறகு நான் என் பையைத் தயாரிக்கிறேன். சில வேளை, நான் என் பேனாவையும் அளவுக்கோலையும் காண்கிறதில்லை. நான் அவற்றை எங்கும் தேட வேண்டும். நான் பாலைக் குடிக்கக் காத்திருக்க வேண்டும். ஏனென்றால் அது அதிகச் ________________ இருக்கிறது. பள்ளிக்குப் போகிறபோது ஒரு நாய்க்குட்டியைப் பார்க்கிறேன். நான் அந்த நாய்க்குட்டியோடு சிறிது நேரம் ________________ . நான் எட்டரை மணிக்குப் பள்ளியை அடைகிறேன்,” என்று அவன் கூறுகிறான்.

| |
|---|
| E |
| TL |
| CE |



Please turn over

Marks

## Question 6B (5 marks)

**பின்வரும் பகுதியைப் படித்துக் கோடிட்ட இடத்தில் உங்கள் சொந்த விடையை எழுது.**

கோமதி அமலனுக்கு உதவி செய்ய விரும்புகிறாள்:

"நீ அதிக ________________ வீணாகக் கழிக்கிறாய். நீ உன் பழக்கங்களை மாற்ற வேண்டும்.

- நீ நேரத்தோடு தூங்க வேண்டும். அப்போது நீ காலையில் சீக்கிரமாக ________________ .
- நீ ________________ பையை இரவில்தான் தயாரிக்க வேண்டும்.
- உன் பாலைச் சீக்கிரமாகத் தயாரிக்க வேண்டும் என்று உன் அம்மாவிடம் சொல்ல வேண்டும்.
- ________________ நீ நாய்க்குட்டியோடு விளையாட வேண்டாம். நீ பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது விளையாட வேண்டும்.

நீ, என் ________________ கேட்டால், நேரத்தோடு பள்ளியை அடைவாய். ஆசிரியர் மகிழ்ச்சியாக இருப்பார்."

| E |
|---|
| TL |
| CE |

Marks

**Question 7 (10 marks)**

**உன் தோழன்/தோழி உன் மீது கோபம் அடைகிறான்/ள். அவன்/அவள் உன்னிடம் பேசுகிறதில்லை. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு உன் தோழனுக்கு/தோழிக்கு 50 - 60 சொற்கள் அளவில் ஒரு கடிதம் எழுது.**

- உன் தோழன்/தோழி ஏன் கோபம் அடைகிறான்/ள்? என்ன நடந்தது?
- தோழன்/தோழி உன்னிடம் பேசுகிறதில்லை. நீ வருத்தமாக இருக்கிறாயா?
- நீ எப்படி மன்னிப்பு கேட்கிறாய்?
- அவன்/அவள் உன்னிடம் மறுபடியும் பேச, நீ என்ன செய்கிறாய்?

அன்புள்ள ..........,

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

இப்படிக்கு,
உன் தோழன்/தோழி

...................... .

| |
|---|
| E |
| TL |
| CE |



Please turn over

Marks

**Question 8 (15 marks)**

***கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.***

1. செல்வி என்பவள் தமிழ் நாட்டு இளவரசி. அந்த நாட்டில் ஒரு சிக்கல் இருந்தது. பல ஆண்டுகளுக்கு மழை பெய்யவில்லை. ஆறுகளிலும் குளங்களிலும் நீர் இருக்கவில்லை.
2. எனவே, மக்களுக்கு உணவும் நீரும் இருக்கவில்லை. மரங்கள் காய்ந்துவிட்டன; விலங்குகள் இறந்துவிட்டன. செல்வியுடைய அப்பா, தமிழ் நாட்டு அரசன். அவர் அந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணத் தம் அமைச்சர்களோடு* பல முறை உட்கார்ந்து பேசினார். அவர்கள் கூறிய எல்லா யோசனைகளையும் செல்வி கேட்க விரும்பினாள். அவளும் ஒரு தீர்வைக் காண யோசிக்கத் தொடங்கினாள். நாட்டு மக்களின் வருத்தத்தை அவளால் பார்க்க முடியவில்லை.
3. செல்வி தன் கருத்தை அப்பாவிடம் கூற விரும்பினாள். அவள் அவரைவிடச் சிறியவள் என்று அவளுடைய அப்பா நினைத்தார். அவள் கூறியதைக் கேட்கவில்லை. அவள் தன் அம்மாவைப் பார்க்கப் போனாள். அவளுடைய அம்மா தன் கருத்தைக் கேட்டார். அவர் அரசனிடம் பேச வாக்கு அளித்தார்.
4. கடைசியில், செல்வி சொன்னதை அரசன் ஒப்புக்கொண்டார். செல்வி அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் தன் கருத்தை விளக்கினாள். மழை பெய்யும்போது மழை நீரைச் சேமிக்கலாம். அவர்கள் ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்ட வேண்டும் என்று கூறினாள்.
5. அரசனும் அமைச்சர்களும் அவளுடைய கருத்தைக் கேட்டு மகிழ்ச்சியாய் இருந்தார்கள். அந்த நாட்டு இளைஞர்கள் செல்விக்கு உதவியாக இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்டினார்கள்.
6. சில மாதங்களுக்குப் பிறகு கனமழை பெய்தது. எல்லா மழைநீரும் அந்த நீர்த்தேக்கத்தில் போனது. எனவே, மக்களுக்கும் விலங்குகளுக்கும் மரங்களுக்கும் அதிக நீர் கிடைத்தது. செல்வியின் உதவியால் இனிமேல் நீர்ச் சிக்கல் இருக்கவில்லை.

****அமைச்சர்: minister***

Marks

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுது.**

From paragraph 1

க. பல ஆண்டுகளுக்குத் தமிழ் நாட்டில் எந்தச் சிக்கல் இருந்தது? (1 mark)

……………………………………………………………………….

From paragraph 2

உ. அந்தச் சிக்கலால் என்ன என்ன ஏற்பட்டன? (2 marks)

(i) ……………………………………………………………………….

(ii) ……………………………………………………………………….

ங. அப்பா ஒரு தீர்வு காண விரும்பினார் என்று எப்படித் தெரியும்? (1 mark)

……………………………………………………………………….

ச. செல்வி என்ன செய்ய விரும்பினாள்? (1 mark)

……………………………………………………………………….

ரு. 'செல்வி இரக்கம் உள்ளவள்' என்று பகுதியில் உள்ள ஒரு சொற்றொடரை எழுது. (1 mark)

……………………………………………………………………

From paragraph 3

சு. அப்பா ஏன் செல்வியுடைய கருத்தைக் கேட்கவில்லை? (1 mark)

……………………………………………………………………

எ. அம்மா செல்விக்கு எந்த வாக்கு அளித்தார்? (1 mark)

……………………………………………………………………

From paragraph 4

அ. நீரைச் சேமிக்க, செல்வி என்ன செய்யச் சொன்னாள்? (1 mark)

……………………………………………………………………

Marks

From paragraph 5

கூ. அரசனும் அமைச்சர்களும் செல்வியுடைய கருத்தைக் கேட்டு எப்படி இருந்தார்கள்? (1 mark)

……………………………………………………………………………

க0. யார் அவளுக்கு உதவி செய்தார்கள்? (1 mark)

……………………………………………………………………………

From paragraph 6

கக. கடைசியில் தமிழ் நாட்டில் எந்த மாற்றம் ஏற்பட்டது? (1 mark)

……………………………………………………………………………

கஉ. கீழ்க்காணும் சொற்களுக்கு விளக்கம் தருக. (3 marks)

| | | | |
|---|---|---|---|
| (அ) | வருத்தத்தை | : | ………………………………… |
| (ஆ) | நீர்த்தேக்கம் | : | ………………………………… |
| (இ) | கனமழை | : | ………………………………… |

E | TL | CE

## Question 9A (5 marks)

**அ. கீழ்க்காணும் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. | run | - | …………………………… |
| 2. | garden | - | …………………………… |
| 3. | elephant | - | …………………………… |
| 4. | fear | - | …………………………… |
| 5. | now | - | …………………………… |

E | TL | CE

Marks

**Question 9B (5 marks)**

**ஆ. கீழ்க்காணும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.**

Mr Sendil is a good teacher. He comes on time to the classroom. Pupils listen to him attentively. They do all their homework. They all succeed in their examinations.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

| |
|---|
| E |
| TL |
| CE |

**Question 10 (15 marks)**

**ஏதாவது ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து, 150 சொற்கள் அளவில் ஒரு கட்டுரை எழுது.**

அ. மாலையில் பள்ளி மணி அடிக்கிறபோது நடக்கிறதைப் பற்றி வருணித்து எழுது. (*நீ என்ன பார்க்கிறாய்? என்ன கேட்கிறாய்? மாணவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள்? பள்ளிச்சூழல் எப்படி இருக்கிறது?)*

**அல்லது**

ஆ. கீழ்க்காணும் தொடரைக் கொண்டு ஒரு கதையை எழுது.

"எனக்கு இந்தப் பரிசு கிடைக்கும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை."

..........................................................................................................

Marks

E

TL

CE

**BLANK PAGE**

**BLANK PAGE**

**BLANK PAGE**

**BLANK PAGE**